**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டம் - 2022**

---

காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2019 ஏப்ரல் 11 ஆம் திகதிய 6346-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III (ii) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், விவசாய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் அமுலாக்கல் முகவராகவுள்ளது. தெரிவு செய்யப்பட்ட வறண்ட பிரதேசங்களில் சிறுநிலவுடமையாளர் விவசாயத்தின் உற்பத்தித்திறன் மற்றும் காலநிலை மீட்சியை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்டத்தின் செயற்பாடுகளானது விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல், விவசாயத்திற்கான நீர் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய பெயர்களிலான மூன்று கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25,200 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 140 மில்லியனாக இருந்ததுடன், அதில் ரூபா 26,829 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 4,024.35 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 மே 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடனுடன் தொடர்புடைய நாணமாற்று சமநிலை சீராக்கங்கள் மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை, எனவே கடன் மீதியானது ஐந்தொகை திகதியில் உள்ளவாறான நியாயமான பெறுமதியை பிரதிபலிக்காது. | 4,829 | இறுதி அறிக்கையை தயாரிக்கும் போது இந்த உண்மை உள்ளடக்கப்பட்டுள்ளதால் முகாமைத்துவத்திற்கு கருத்து தெரிவிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. | நாணயமாற்று விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களின் பிரகாரம் நாணயமாற்று சமநிலை சீராக்கம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) | நி.பி. 103 மற்றும் 104 | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 அளவில் 2021 இல் ஏற்பட்ட ரூபா 144,300 பெறுமதியான மடிக்கணனியின் இழப்பிற்காக பூர்வாங்க விசாரணைக்கான குழுவை நியமித்ததைத் தவிர மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்கள் கிடைத்ததும் பூர்வாங்க விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. ஆனால் விசாரணையை பூர்த்தி செய்ய முடியவில்லை. இது இரண்டு மாத காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படும். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 502(2) | பொருளிருப்பு உருப்படிகள் மற்றும் நிலையான சொத்துகளைப் பெற்றுக்கொள்ளும் போதும் வழங்கும் போதும் வழங்கப்பட வேண்டிய பெறுகைக் கட்டளை மற்றும் வழங்கல் கட்டளை செயற்திட்டத்தின் தொடக்கத்தில் இருந்து பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்தால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு இணங்கப்பட்டது. கட்டளைகளை வழங்குவது தொடர்பான செயன்முறை சீர்செய்யப்பட்டுள்ளது. செயற்திட்டத்தால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. | பொருளிருப்பு உருப்படிகளை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வழங்குதல் ஆகியவற்றின் பிரகாரம் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நி.பி. 756 | நியமனம் செய்யப்பட வேண்டிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை ஒவ்வொரு ஆண்டிஎன் திசெம்பர் 15 இல் அல்லது அதற்கு முன்னர் நியமனம் செய்யப்பட வேண்டும், எனினும் ரூபா 95 மில்லியன் பெறுமதியான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பொருளிருப்பு பொருட்களை சரிபார்ப்பதற்கு வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. 2023-01-02 ஆம் திகதிய எம்ஓஏ/சீஎஸ்ஐஏபி/பிஎம்யூ/ எஃஎம்/39.I ஆம் இலக்க எனது கடிதத்தின் பிரகாரம் மெய்மையாய்வு பணியை மேற்கொள்வதற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டுள்ளது. CSIAP செயற்திட்டத்திற்கு நிலையான சொத்துப் பதிவேடு காணப்படாத போதிலும் ஏனைய பதிவேடுகள் பேணப்படுகின்றன. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மூன்று செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | இந்தக் குழுவைக் கூட்டுவதற்கான அதிகாரமும் பொறுப்பும் விவசாய அமைச்சிடம் உள்ளது. இதற்கான பல வாய்ப்புக்களை அமைச்சு வழங்கியுள்ளது. அந்த சந்தர்ப்பங்களின் பிரகாரம் அதற்கான கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட 42 செயற்பாடுகளில், 14 செயற்பாடுகள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 50 சதவீதத்திற்கும் குறைவான பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளன. | அதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பலவீனம் மற்றும் சரியான திட்டமிடல் இல்லாததால் அவை தாமதமாகியிருந்தன. | பயனாளிகள் முறையாக இனங்காணப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பயிற்சிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட 42 செயற்பாடுகளில், 6 செயற்பாடுகள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 51 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் குறைவான பௌதீக முன்னேற்றத்தை அடைந்துள்ளன. | அதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பலவீனம் மற்றும் சரியான திட்டமிடல் இல்லாததால் அவை தாமதமாகியிருந்தன. | பயனாளிகள் முறையாக இனங்காணப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பயிற்சிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 3.2 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஒக்தோபர் 28 இல் முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் மொனராகலை மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்காக முற்பணத்தை செயற்திட்டம் செலுத்தியிருந்தது. எனினும், கமநல சேவை நிலையங்களின் நவீனமயமாக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முல்லைத்தீவு மாவட்டத்தில் கமநல சேவை நிலையங்களை நவீனமயமாக்கும் பணிகள் பல்வேறு காரணங்களால் தாமதமாகி வருகின்றன. மொனராகலை மாவட்டத்தில் புத்தல, வெல்லவாய மற்றும் தெலுல்ல ஆகிய 03 கமநல சேவை நிலையங்களுக்கான ஒப்பந்தங்கள் பொதியாக வழங்கப்பட்டுள்ளன. தெலுல்ல கமநல சேவை நிலையத்தின் உத்தேச நிர்மாணப் பணிகள் வீதி நுழைவு இல்லாததாலும், நிர்மாணப் பகுதியில் மழைநீர் நிரம்பியதாலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பின்னர் வேறு இடத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அங்கீகாரம் கிடைக்காததால் நிர்மாணிக்க முடியவில்லை. எனினும், எஞ்சிய இரண்டு கமநல சேவை நிலையங்களின் கொடுப்பனவுகளிலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட தொகை கழிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் பணிகள் சரியாக திட்டமிடப்பட்டு, அவை அடைந்து கொள்ளப்படக்கூடிய வகையில் முகாமை செய்யப்பட வேண்டும். |

## 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (TO), சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (STO) மற்றும் பொறியியலாளர்களின் உத்தியோகபூர்வ பயன்பாட்டிற்காக Intel core i7 மற்றும் 16 GB memory உடன் கூடிய உயர் தரத்திலான தன்மையுடைய 48 மடிக்கணனிகளை ரூபா 24.5 மில்லியன் பெறுமதியில் செயற்திட்டம் கொள்வனவு செய்திருந்த போதிலும் 48 மடிக்கணனிகளில் 33 மடிக்கணனிகள் நோக்கத்திற்குப் புறம்பாக ஏனைய பதவிகளுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புடன் இணங்கப்படுகின்றது. இந்த கணனிகள் ஏற்கனவே உத்தியோகத்தர்களால் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டு வருகின்றதுடன் வளங்கள் வீணாக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான திட்டங்களில் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவுக்காக 7020 சதுர அடியிலான ஒரு கட்டிடம் குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் அரசாங்க மதிப்பீட்டாளரின் அறிக்கையை மீறியதாலும், சந்தை பெறுமதியை மீறியதாலும் கணக்காய்வு திகதியான 2023 மே 15 இல் உள்ளவாறு ரூபா 960,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. 32 ஊழியர்களிற்காக மாத்திரமே இக்கட்டிடம் பயன்படுத்தப்பட்டதால் ஒரு ஊழியருக்கு சுமார் 219 சதுர அடிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாலும், பொறளை பத்தரமுல்ல பிரதான வீதியில் இருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் இக்கட்டிடம் அமைந்துள்ளதாலும் போக்குவரத்திற்கு அதிக நேரமும் மேலதிக கிரயமும் செலவிடப்பட வேண்டியிருந்தது. | சுமார் 10 வாகனங்களை நிறுத்தும் வசதி மற்றும் சதுர அடி அளவுடன் கூடிய இடம் காணப்பட்டதைக் கருத்தில் கொண்டு அதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டிடத்தின் சதுர அடி தொடர்பான பெறுமதி ரூபா 660,000 மாத்திரமே ஆகும்.<br><br>பொறளை மற்றும் பத்தரமுல்லையைச் சுற்றி மேற்குறிப்பிடப்பட்ட விலைகள் மற்றும் வசதிகளைக் கொண்ட கட்டிடங்களை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை தயவுசெய்து சுட்டிக்காட்டுகின்றேன். | சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் ஒப்பந்தங்களை கைச்சாத்திடுதல் என்பன மிகவும் செயற்திறனாகவும், சரியாகவும் மற்றும் குறைந்தபட்ச போக்குவரத்து கிரயத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | குருநாகல் மாவட்டத்தில் வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக 15,762 தொகுதி மஞ்சள், இஞ்சி மற்றும் பழ நாற்றுக்களை கொள்வனவு செய்து விநியோகிப்பதற்கான பெறுகையை வழங்குவது தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரைகள் இல்லாமல் ரூபா 12.9 மில்லியன் தொகையான குறைந்த விலைமனுவை நிராகரித்து ரூபா 20.5 மில்லியனிற்கு இரண்டு விலைமனுதாரர்களிற்கு வழங்கப்பட்டதன் காரணமாக ரூபா 7.6 மில்லியன் நட்டம் ஏற்பட்டது. மேலும், பெறுகைக் குழுவின் மூன்று உறுப்பினர்களில் ஒருவர் பெறுகையை வழங்குவதில் கையெழுத்திடுவதற்கு மறுத்திருந்தார். பெறுகைத் தீர்மானத்தில் கையொப்பமிடாத உறுப்பினரின் கையொப்பம் போலியானது என்றும், அமைச்சின் செயலாளர் இந்த விடயம் தொடர்பாக எந்த விசாரணையையும் நடாத்தியிருக்கவில்லை என்றும் உறுப்பினர் 2021 நவம்பர் 21 இல் அமைச்சு செயலாளருக்கு எழுத்துமூலம் முறைப்பாடு செய்தார். பெறுகைத் தீர்மானம் போலியானது என செயலாளரிடம் தெரிவித்து இருவர் கையெழுத்துக்களை மாத்திரமே இட்டு பெறுகைத் தீர்மானம் அறிவிக்கப்பட்டது. நிதிப்பிரமாணம் 135(2) இற்கு முரணாக குருநாகல்லில் செயற்திட்டப் பணிப்பாளரினால் பெறுகைத் தீர்மானத்தில் ஒரு கையொப்பம் இன்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | பெறுகைக் குழுவின் மூன்று உறுப்பினர்களில் ஒருவர் இணங்கவில்லை என்றால் அத்தகைய சூழ்நிலையில், பெறுகையை தொடரலாம். அந்தச் செயற்பாடுகளை மேற்கொள்ளாததன் மூலம் குறித்த உத்தியோகத்தர் தனது கடமைகளை புறக்கணித்திருந்தார்.<br><br>இது தொடர்பில், விவசாய அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரால் வழங்கப்பட்ட அறிக்கைகள், பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைத்துள்ளன. அந்த பரிந்துரைகளின் அடிப்படையில், பூர்வாங்க விசாரணைக் குழுக்களை நியமித்துள்ளோம். | பெறுகை வழிகாட்டல்களில் உள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் இந்த செயற்திட்டம் செயற்பட வேண்டியதுடன் அரசாங்கத்தின் வினைத்திறனை அதிகப்படுத்தி பொறுப்பான தரப்பினரிடமிருந்து சேதங்களை அறவிடும் விதத்தில் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) பெறுகைக்காக தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர் 25 கிலோகிராம் கூட்டு உரத்தை போக்குவரத்துடன் ரூபா 490 இற்கு வழங்குவதற்கு இணங்கியிருந்தார், ஆனால் 2022 ஆகஸ்ட் 14 இல் இந்த கம்பனியால் உரிய உர இருப்பை வழங்க முடியவில்லை என தெரிவிக்கப்பட்டது. 2022 ஆகஸ்ட் 16 இல் பெறுகைக் குழு தொடர்புடைய தீர்மானத்தை மீள்மதிப்பீடு செய்தது. முதல் மதிப்பீட்டில் தெரிவு செய்யப்படாத வழங்குநர் இரண்டாவது மதிப்பீட்டில் சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் பெற்றிருப்பதைக் குறிப்பிட்டு, சந்தையில் நிலவும் விலைகள் அல்லது மீள்கூறுவிலையைப் பொருட்படுத்தாமல், 25 கிலோகிராம் உர மூட்டை ஒவ்வொன்றும் ரூபா 950 இற்கு கொள்வனவு செய்வதற்கு கேள்வி வழங்கப்பட்டது.<br><br>(i) பேராதனை விவசாயத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையின் (SLS.1635:2019) பிரகாரம் இரண்டாவது முறையாக வழங்கப்பட்ட 7,964 உர மூட்டை இருப்புக்களுக்கு உரிய உர இருப்பு மூன்று தடவைகளில் வழங்கப்பட்டது. அளவுருக்கள் SLS பெறுமதியுடன் இணங்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பையும் பொருட்படுத்தாமல் மொத்த உரத் தொகைக்கு ரூபா 14,973,900 செலுத்தப்பட்டது.<br><br>(ii) இந்த உர இருப்பை வழங்கிய விவசாயிகள் தெரிவுசெய்த அடிப்படை மற்றும் வழங்கப்பட்ட விவசாயிகளின் பெயர் பட்டியல், கையெழுத்து ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததுடன் இருப்பு புத்தகங்களில் சேர்க்கப்படவில்லை. | இது தொடர்பில், விவசாய அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரால் வழங்கப்பட்ட அறிக்கைகள், பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைத்துள்ளன. அந்த பரிந்துரைகளின் அடிப்படையில், பூர்வாங்க விசாரணைக் குழுக்களை நியமித்துள்ளோம். விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் இதற்கான பதில்களை வழங்குவேன். | பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்குதல் மற்றும் அரசாங்கத்தின் வினைத்திறனை அதிகப்படுத்தி பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து சேதங்களை அறவிடும் வகையில் செயற்பட வேண்டும். |
| (உ) அனுராதபுரம் ரனோரவ, மஹானிகவாவில் துரித விவசாய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், ஒரு விவசாயிக்கு ¼ ஏக்கர் காணியில் மிளகாய் பயிரிடுவதற்கு 19 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் செயற்திட்டத்திற்காக ரூபா 2.7 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் இச்செயற்திட்டத்தை பௌதீக | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. முதலில் 19 விவசாயிகளுக்கு மிளகாய் பயிர்ச்செய்கையில் பயிற்சி அளிக்கப்பட்டது. அதன் பின்னர் அவர்கள் மிளகாய் பயிர்ச்செய்கைக்கு பணிக்கப்பட்டனர். மிளகாய் பயிரை வெள்ளை ஈக்கள் சேதப்படுத்தியதால், பயிர் அழிவடைந்தது. மேலும் உரத் | செயற்திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னர் சரியான திட்டமிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். பயனாளிகளுக்கு சரியான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | ரீதியாக பரீட்சித்த போது ஒரு விவசாயி மாத்திரமே மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டிருந்ததுடன் ஏனைய 18 விவசாயிகளும் மிளகாய்ச் செய்கையை விட்டுச் சென்றிருந்தனர். இதனால் ஏற்பட்ட செலவினம் விளைவற்றிருந்தது. | தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் மிளகாய் பயிர்ச்செய்கையை கைவிட்டு வேறு பயிர்களுக்கு திரும்பினர். | முறையாக கண்காணிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | அனுராதபுரம் றனோராவ, மஹானிகவாவில் துரித விவசாய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 16 விவசாயிகளுக்கு தலா ½ ஏக்கரில் மாம்பழச் செய்கைக்காக ரூபா 244,208 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 44 விவசாயிகளுக்கு தலா ½ ஏக்கரில் ஆரஞ்சு பயிர்ச்செய்கைக்காக ரூபா 828,100 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் கொய்யா பயிர்ச்செய்கைக்காக இரண்டு விவசாயிகளுக்கு ரூபா 160,866 தொகை செலவிடப்பட்டிருந்தது. முறையான அறிவுறுத்தல்கள் இல்லாததாலும், பின்தொடர் நடவடிக்கை இல்லாததாலும் இச் செயற்திட்டங்கள் தோல்வியடைந்திருந்தன. | பிரதம உள்ளக கணக்காய்வாளரால் சுட்டிக்காட்டப்பட்ட அவதானிப்புகளுக்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சிக்கல்கள் தொடர்பான கோவைகள் மற்றும் ஆவணங்களைச் சரிபார்த்து, உடனடியாக தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்ட பின்னர் முழுமையான பதில் அனுப்பப்படும். | செயற்திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்னர் சரியான திட்டமிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். பயனாளிகளுக்கு சரியான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு முறையாக கண்காணிக்கப்பட வேண்டும். |
| (எ) | அரசாங்க விதைப் பண்ணைகளிலிருந்து கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட 3,000 கிலோகிராம் பச்சைப்பயறு விதைகளில் 1,175 கிலோகிராமை விடுவிப்பது தொடர்பான அறிக்கைகளையோ அல்லது எழுத்துமூல குறிப்புக்களையோ வடமத்திய மாகாண பிரதி செயற்திட்டப் பணிப்பாளர் அலுவலகம் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பிரதம உள்ளக கணக்காய்வாளரால் சுட்டிக்காட்டப்பட்ட அவதானிப்புகளுக்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சிக்கல்கள் தொடர்பான கோவைகள் மற்றும் ஆவணங்களைச் சரிபார்த்து, உடனடியாக தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்ட பின்னர் முழுமையான பதில் அனுப்பப்படும். | பதிவேடுகள் சரியாக பேணப்பட வேண்டியதுடன் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அறவிடப்பட வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம் தொடர்பான சிக்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பதவியணி உறுப்பினர்களுக்கு கடமைப் பட்டியல் வழங்கப்படாதமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தில் 33 பாடப்பிரிவு நிபுணர்கள் (PS 1 முதல் PS 3 வரை) பணிபுரிகின்றதுடன் அவர்கள் அனைவருக்கும் கடமைப் பட்டியல்கள் உள்ளது. 2023 யூன் 6 இற்கு முன்னர் சம்பந்தப்பட்ட பதவியணியினரிற்கு கடமைப் பட்டியலை வழங்குமாறு செயற்திட்டப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட பிரிவுகளின் நிபுணருக்கு அறிவுறுத்தியிருந்தார். | அனைத்து ஊழியர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் வழங்கப்பட வேண்டும். |